## வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம்.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்ட ஏற்பாடுகள், தாபன விதிக்கோவை மற்றும் சுற்று நிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களால் இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் பட்டியலை தயாரிப்பதற்காக விண்ணப்பங்கள் கீழ்வரும் தகைமையுடைய சேவையிலுள்ள / சேவையிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

1. அரசசேவையிலிருந்து இளைப்பாறிய பதவிநிலை உத்தியோகத்தர்கள் (இலங்கை நிர்வாகசேவை / கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் / மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் / முகாமைத்துவ உதவியாளர் அதிசிறப்புத்தரம் மற்றும் சமமான சேவைகள் / கூட்டுத்தாபன / கூட்டுறவுத்துறையின் சிரேஷ்ட அலுவலர்)

**அல்லது**

2. விண்ணப்ப முடிவுத்திகதியில் சேவையில் 5 வருடங்களைப் பூர்த்தி செய்து தற்போது அரசசேவையிலுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்கள் அல்லது கூட்டுத்தாபன / கூட்டுறவுத்துறையின் சிரேஷ்ட அலுவலர்.

**அத்துடன்**

3. வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்

   தெரிவு செய்யப்படும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு விசாரணை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு இணங்க கொடுப்பனவு வழங்கப்படும்.

கீழேயுள்ள மாதிரி படிவத்திற்கிணங்க தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 2024.02.06 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
இல.48,காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மூலையில் "ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை இணைப்பதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பா.அபிராமி,
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்

பா.அபிராமி
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணம்